# ஒரே ஒரு வாழ்க்கை



நான் ஒரு சிறைக்கைதி பேசுகிறேன், இப்போது நான் இந்த உலகத்தில் இல்லை. என் நாட்கள் முடிந்தது. நான் வாழும் போது சரியாய் வாழவில்லை. நல்ல பக்தியான, ஒரு இந்து குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, ஒழுக்கத்தோடு வளர்க்கப்பட்டேன். ஆனால், நான் ஒழுக்கமாக வளரவில்லை. என் வாலிப நாட்களில் சேரக்கூடாத நட்பும், பார்க்க கூடாத காட்சிகளும், நான் போகக் கூடாத எல்லைகளுக்கு என்னை கொண்டு சென்றது. பக்தியானவன் தான், ஆனால், உண்மையான தெய்வத்தின் மீது இல்லை. உண்மையான தெய்வத்தை பற்றி, எத்தனையோ முறை சொன்னாங்க. எனக்கு அப்போ அது புரியல. நான் செய்த சின்ன சின்ன தவறுகள், என்னை பெரிய தவறுகளுக்கு இழுத்துச் சென்றது. அதின் விளைவாக, நான் சிறையில் அடைக்கப்பட்டேன். எனக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. மரணம் என்னை சந்தித்தது. நான் இந்த உலகத்தில் சந்தித்த போராட்டங்கள், பிரச்சனைகள், தோல்விகள், எல்லாம் முடிந்தது, என்று நினைத்துக் கொண்டிருந்தேன். மரணத்திற்கு பிறகு ஒரு வாழ்க்கை உண்டு என்பது, அப்போது தான் புரிந்தது. நான் வணங்கின தெய்வங்களை தேடின என் கண்கள், நான் வணங்காத, தேடாத, ஒருவர் தான் தெய்வம் என்பதை கண்டது. நான் வணங்கின சிலைகள் அல்ல, எனக்காக சிலுவையில், தன் உயிரையே கொடுத்து, என்னுடைய பாவங்களுக்காக மரித்த, அந்த இயேசு சாமி தான், உண்மையான தெய்வம் என்பது, மரித்த பிறகு தான் எனக்கு தெரிந்தது. என்னால் அதை நம்ப முடியவில்லை. ஏனென்றால், அந்த தெய்வத்தை என் வாழ்கையில், நான் ஏற்றுக் கொள்ளவேயில்லை. திடீரென்று, பார்க்கமுடியாத அளவு வெளிச்சமுள்ள, இயேசு சாமிக்கு, முன்பாக என்னை கொண்டு போய் நிறுத்தினார்கள். எனக்கு முன்பாக ஒரு புத்தகம் திறக்கப்பட்டது. அந்த புத்தகத்திலே, என் பெயரை தேடினார்கள். ஆனால், அதில் என் பெயர் இல்லை. இயேசு சாமிய குல தெய்வமா ஏற்று கொண்டவர்கள் பெயர்கள் மட்டும் தான் அந்த புஸ்தகத்தில் இருக்கும் என்று சொல்லப்பட்டது. நான் எவ்வளவு அழுது, புலம்பியும், அந்த தீர்ப்பு மாற்றப்படவில்லை. உலகத்தில் வந்த தீர்ப்பும் என்னை சந்தோஷமாக வாழ விடவில்லை, இந்த மோட்சத்தில் வந்த தீர்ப்பும், நான் இங்கே வாழ தகுதியற்றவன் என்று சொல்லிவிட்டது.

நான் போகிறேன், அதற்கு முன்பாக, இதை வாசிக்கிற நீங்கள் யாராக இருந்தாலும், இந்த இயேசு சாமி பற்றி யாரும் சொல்லாததினாலே, நான் இப்படிப்பட்ட ஒரு கொடுமையான இடத்திற்கு வந்தது போல, நீங்க யாரும் இங்கே வந்துவிடக்கூடாது. இந்த பூமியில் வாழும், ஒவ்வொரு மனிதனுக்காகவும், இயேசு சாமி சிலுவையில் இரத்தம் சிந்தி, மரித்து, மூன்றாம் நாள் உயிரோடு எழுந்திருக்கிறார், என்பதை நீங்கள் நம்பும் போது, உங்கள் பெயரும் அந்த புஸ்தகத்தில் எழுதப்படுகிறது. என்னை நரகத்தில் தள்ளப் போறாங்க, நீங்க யாரும் இங்கே வரக்கூடாது. இது எப்பொழுதுமே அக்கினி எரிகிற ஒரு இடம்.... ஐயோ எரியிதே, எரியிதே... ஒரே ஒரு வாழ்க்கை, அதை இயேசுவுக்கு கொடுங்க, அவரை ஏற்றுக்கொள்ளுங்க. இதோ, நியாயம் தீர்க்கிற ராஜாவாக இயேசு சாமி வருகிறார். அதற்கு, முன்பாக மனந்திரும்புங்கள்.

இதை வாசிக்கிற அன்பு சகோதரனே, சகோதரியே, இந்த பூமியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும், இந்த, ஒரே ஒரு வாழ்க்கைக்கு பின்பதாக, முடிவில்லாத ஆண்டுகள், நாம் வாழப்போகும் ஒரு வாழ்க்கை இருக்கிறது. அதற்கு, இந்த இயேசு கிறிஸ்துவை, உன் பாவம் போக்கும் பலியாக, நீ ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**“இதோ சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடு கூட வருகிறது”.**


*For Contact*

END TIME WARRIORS

**Email:info@endtimewarriors.org**


Diocesan Offset Press, Palayamkottai. Ph : 0462 2573182